20th March 1963]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது நாகையிலிருந்து சென்னைக்கு புதிதாக விடப்படுகிற பஸ், கனம் அங்கத்தினர் சொல்லுகிற மார்க்கமாகத்தான் செல்லும்.

*Lingampatti Panchayat (bifurcation)*

* 304 *Q*.—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Chief Minister be pleased to state when the proposal for the constitution of two panchayats of Lingampatti and Kulasekarapuram in the place of existing Lingampatti Panchayat, will be given effect to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The proposal though approved could not be given effect to due to the enactment of the Madras Local Authorities (Extension of term of office of members) Act, 1962 which prohibits elections during the period of the emergency.

**திரு. எஸ். மாதவன் :** இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்ற பஞ்சாயத்துக்கள் எல்லாம் ரெவின்யு க்ரூப் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? எப்பொழுது செய்யப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புதிய பொதுத் தேர்தல்கள் வருவதற்கு முன்பு இவை எல்லாம் பரிசீலனை செய்யப்படும்.

**சேலம் பெங்களூர் ரயில் பாதை (நிலம் ஒப்படை செய்தல்)**

* கேள்வி 305.—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம்–பெங்களூர் வரை போடப்பட இருக்கும் ரயில் பாதையில் ஓசூரிலிருந்து தர்மபுரி வரையில் பழைய ரயில் பாதை எடுக்கப்பட்டபின் மேற்படி நிலம் இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதை ரயில்வேக்கு மாற்றம் handover செய்ய இவ்வரசாங்கம் உத்தியோகஸ்தர்களை நியமித்துள்ளதா ?

(இ) அப்படியாயின், எப்போது மேற்படி வேலை முடியும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The work is expected to be completed by the end of May 1963.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தனிப்பட்டவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிற காரணத்தால், இந்த வேலை தாமதப்படுகிறதா ? அப்படி தாமதப்படுவதினாலே ரெயில் பாதை அமைக்கும் வேலையில் தாமதம் ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** என்னிடத்தில் இருக்கிற விவரப்படி விசேஷமான தாமதம் ஏற்படவில்லை. இந்த வேலையை, நான் குறிப்பிட்டதுபோல, 1963-ம் ஆண்டு இறுதிக்குள் முடித்து விடலாமென்று அதிகாரிகள் நம்புகிறார்கள்.

**திருமதி அ. கிருஷ்ணவேணி :** மதுரை ஜில்லாவில் பெரும் பகுதியான மக்களுக்கும், வியாபாரம் பெருகுவதற்கும் மிகவும் வசதியாக இருக்கக் கூடிய, ஏற்கெனவே சர்க்கார் கவனத்தில் இருக்கிற, திண்டுக்கல்–கூடலூர் ரெயில் பாதை போடப்படுமா ? எப்பொழுது அந்த வேலை துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் இருக்கக்கூடிய நிலைமையை விவரமாகச் சொல்லுகிறேன்.